# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

# பாலர் நிலை (Reception)

## 1/09/2019 - 31/08/2020 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

போட்டி நடைபெறும் திகதி 9/11/2024

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## கிளி

கிளி ஒரு பறவை. கிளி மிகவும் அழகான பறவை. அது கீச்....கீச் என்ற சத்தமிடும். அது பச்சை நிறம் உடையது. கிளியின் சொண்டுகள் சிவப்பாக இருக்கும். கிளி மரத்தில் இருக்கும் பொந்துகளில் வாழும். கிளி பழங்களை விரும்பி உண்ணும். கிளிகளில் பல இனங்கள் உண்டு. கிளிகள் மனிதர் பேசுவதுபோல் பேசும் தன்மை உடையன. இதனால் கிளிகள் பேசும் என்று கூறுவார்கள். கிளிகள் பற்றிப் பல பாடல்கள் இருக்கின்றன.